## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C. No.376 / 2019 |
| preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| DEPOSITION OF WITNESS for Court | Petitioner Respondent | அ.சா.4 |

| | | |
|---|---|---|
| Name | : | திரு.முல்லைநாதன் |
| Father's/Husband Name: | | திரு.கிருஷ்ணசாமி |
| Village | : | துறைமங்களம் |
| Taluk | : | பெரம்பலூர் |
| Age | : | 62 /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 10.08.2023

**முதல் விசாரணை :–**

01. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். 01.09.2018ம் தேதி காலை 06.00 மணிக்கு பாலமுருகன் கோவில் அருகே வாசுகி என்பவர் நகை காணமால் போனது சம்மந்தமாக போலீசார வரைபடம் வரைந்தார்கள். அதற்காக அந்த கையொப்பம் போட்டேன். என்னுடன் கருணாமூர்த்தி என்பவர் கையொப்பம் போட்டார். (**அந்த பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகும்**). போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–(1,2 எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

01. முதல் விசாரணையில் சொன்னதை தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். நகை, தங்கமா, வெள்ளியா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் போட்ட தாளில் உள்ள விவரம் தெரியுமா என்றால்

கோவிலின் அமைப்பை பற்றி எழுதி இருந்தார்கள். வேறு எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியும்.

02. நான் சொல்வது போல் சம்பவயிடத்தில் கையொப்பம் போடவில்லை என்றாலும், போலீசார் சொன்னதற்காக காவல் நிலையத்தில கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல. என்னை எந்த போலீஸ் விசாரணை செய்தார் என்றால் உதவி ஆய்வாளர். போலீசார் கேட்டுக்கொண்டதற்காக கையொப்பம் போட்டுவிட்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C. No.376 / 2019 |
| preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| DEPOSITION OF WITNESS for Court | Petitioner Respondent | அ.சா.1 |
| Name : | | திருமதி.வாசுகி |
| Father's/Husband Name: | | திரு.நாகராஜன் |
| Village : | | துறைமங்களம் |
| Taluk : | | பெரம்பலூர் |
| Age : | | 56 /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 10.08.2023

**மனுவில் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை அனுமதிக்கப்படுகிறது :-**

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-(1,2 எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**01.** எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் படிக்க தெரியும் எழுத தெரியாது. முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். புகாரை போலீசார் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் சரிதான். புகாரை நாங்கள் எழுதினோமா என்றால் நான் சொல்ல, சொல்ல போலீசார் எழுதி என்னிடம் கையொப்பம வாங்கினார்கள்.

02. எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் 31.08.2018. அன்று வெள்ளிக்கிழமை என்றால் சரிதான். வெள்ளிக்கிழமை என்றால் கோவிலுக்கு சாமி கும்பிட நிறைய பேர் வருவார்கள் என்றால் சரிதான். முருகன் கோவிலுக்கு சாமி கும்பிடுவதற்கு நடந்தும் வருவார்கள், பைக்கிலும் வருவார்கள் என்றால் சரிதான். வசதி உள்ளவர்கள் தங்கத்தில் தாலி செயின் போடுவார்கள்.

03. வசதி இல்லாதவர்கள் கவரிங் தாலி செயின் போடுவார்கள் என்றால் சரிதான்.

புகாரிலோ, முதல் விசாரணையிலும், நான் தங்கத்தில் தாலி செயின் போட்டு இருந்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டு சொன்னேன். " யாக பத்திரகாளியம்மன் கோவிலில் சாமி கும்பிட்டுவிட்டு முருகன் கோவிலுக்கு உள்ள செல்வதற்காக போகும் போது இரண்டு பேர் பைக்கில் வந்தார்கள், ஒருத்தர் வண்டியில் அமர்ந்திருந்தார். ஒருவர் மட்டும் வந்து என்னிடம் பட்டறை எங்கு இருக்கிறது என்று கேட்டார். நான் பட்டறை அடுத்த வீதியில் உள்ளது.

04. அங்கு போய் கேளுங்க என்று சொல்லிவிட்டு திரும்பி கோவிலுக்கு போகும் போது தாலி கொடி மற்றும் ஒற்றை செயினை அந்த வண்டியில் வந்த ஒரு பையன் எனது பின்புறமாக வந்து பிய்த்து கொண்டு என்னை கீழே தள்ளிவிட்டு பைக்கில் தப்பித்து சென்றுவிட்டான். எனக்கு உடனே அதிர்ச்சியில் பேச்சு வரவில்லை " என்று புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ கூறினேனா என்றால் கூறினேன். நான் அவ்வாறு கூறவில்லை. முதல் விசாரணையில் தான் அவ்வாறு கூறினேன் என்றால் சரியல்ல.

05. முதல் விசாரணையில் தங்க, நகை என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் ஆஜராகி இருந்த எதிரிகளை தெரியும் என்று சொல்லியுள்ளேன். அதில் யார் என்னுடைய செயினை பறித்தார்கள் என்றால் பின்னால் உட்கார்ந்தவர் தான் பறித்தார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சிகிச்சை பெற்ற பின் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் அன்றே புகார் கொடுத்தேன். இரண்டு நபர்கள் பைக்கில் வந்ததாக சொல்லியுள்ளேன்.

06. அவர்கள் ஆணா, பெண்ணா என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் போலீசார் என்னை கேட்கவில்லை. பைக்கில் வந்த நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது. போலீசார் சொல்லி கொடுத்ததால் தெரியும் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. பைக்கின் நிறம் மற்றும் பெயர் தெரியாது என்றால் சரிதான். என்னை தள்ளவிட்டு அவர்கள் எந்த திசையில் ஓடினார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

07. என்னுடைய தங்க நகை என்பதற்கு ஆதாரம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், எதிரிகள் எந்த பவுன், நகைகளையும் பறிக்கவில்லை என்றாலும் போலீசார் சொன்னதால் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எந்த போலீசார்

விசாரணை செய்தார் என்றால் பெரம்பலூர் போலீசார் விசாரணை செய்தார்.

08. புகார் கொடுத்த பிறகு போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். எப்போது எங்கு என்று ஞாபகம் இல்லை. விசாரித்த போலீசார் எனக்கு உறவினர் என்பதால் பொய்யான புகாரை தயார் செய்து அதன்படி சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.